செ.வெ.எண்: 52 நாள் : 25.11.2021

## கடலூர் மாவட்டம்

## மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் வழங்கினார்

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம் அம்பலவாணன்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கி.பாலசுப்ரமணியம், இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

அம்பலவாணன்பேட்டை மற்றும் குறிஞ்சிப்பாடி மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்கள் 835 பயனாளிகளுக்கு துணிமணிகள் ரூ.9,51,602/- மதிப்பீட்டிலும், 275 குடும்பங்களுக்கு ரூ.3,55,104/-மதிப்பீட்டில் பாத்திரங்கள், 131 குடும்பங்களுக்கு எரிவாயு இணைப்பு ரூ.1,22,616/- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளும் மற்றும் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.1,50,000/-மதிப்பீட்டில் வங்கிகடனுக்கான காசோலையும் ஆக மொத்தம் 1243 பயனாளிகளுக்கு ரூ.15,79,322/-மதிப்பீட்டில் நலத்திட்டங்களை மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கினர்.

தொடர்ந்து காட்டுமன்னார்கோயில் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு 372 பயனாளிகளுக்கு ரூ.485760/- மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படவுள்ளன.

**மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் நலத்திட்டங்களை வழங்கி தெரிவித்ததாவது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும் என அறிவித்து, 08.11.2021 அன்று வேலூர் மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்கி தொடங்கிவைத்தார். அதன் அடிப்படையில் இன்று கடலூர் மாவட்டத்தில் குறிஞ்சிப்பாடி, அம்பலவாணன்பேட்டை, காட்டுமன்னார்கோயில், விருத்தாசலம் ஆகிய 4 மறுவாழ்வு முகாம்களில் 1303 இலங்கை தமிழர்கள் வசித்து வரும் இலங்கை தமிழர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது.

மேலும் முகாம்களில் வசிக்கும் இலங்கை தமிழர்களின் நல்வாழ்விற்கு தேவையான அடிப்படை கட்டமைப்புளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும், முகாம்வாழ் பிள்ளைகளின் கல்வி மேம்பட கல்வி உதவித்தொகை வழங்கப்படும், ஒவ்வொரு மாதமும் மேற்கண்ட முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு பணக்கொடை, விலையில்லா அரிசி மற்றும் மானிய அரிசி, பருப்பு, எண்ணெய் போன்றவை வழங்கப்பட்டு வருகின்றன. வருடந்தோறும் முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு பொங்கல் பண்டிகையின் போது கோ ஆப்டெக்ஸ் மூலம் விலையில்லா கைத்தறி துணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் மக்களுக்கு வீடுகள் கட்டித்தர இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. மேலும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு தகுதியினை மேம்படுத்திட திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும். முகாம்களில் உடனடி அவசியத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றித்தரப்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வருவாய்)திரு.ரஞ்ஜீத்சிங்,இ.ஆ.ப.,அவர்கள், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) / திட்ட இயக்குநர் திரு.பவன்குமார் ஜி.கிரியப்பனவர், இ.ஆ.ப., அவர்கள், வருவாய் கோட்டாட்சியர் திரு.அதியமான்கவியரசு, திட்ட இயக்குநர்(மகளிர் திட்டம்) திருமதி.செந்தில்வடிவு, துணை இயக்குநர்(சுகாதாரம்) மரு.மீரா, வட்டாட்சியர் திரு.சையது அபுதாஹீர், உள்ளாட்சி பிரதிநிதிகள், பயனாளிகள மற்றும் அரசு அலுவலர்கள், கலந்து கொண்டனர்.

---

-வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்